# முடி வெட்ட மறுத்தவருக்கு ரூ.100 அபராதம்


... stered as a Newspaper in Ceyl ... * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் ரேஜிஸ்டர் எண் : 49
போன் 889

National Tamil Daily

மலர் 9
இதழ் 134
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 11 ரபி அவ். 16 ஞாயிற்றுக்கிழமை [25-6-67]


## சிகை அலங்கரிப்பு வழக்கில் தீர்ப்பு

காங்கேசன்துறை, சனி

சமூகக் குறைபாடு ஒழிப்புச்சட்ட 21-வது 'பி' பிரிவின் கீழ் சுன்னாகம் பொலிசார் சிகை அலங்காரத் தொழிலாளர் ஒருவருக்கு எதிராக மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் முதல் முறையாக தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நீதவான் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மாஜிஸ்டிரேட் அவருக்கு 100 ரூபா அபராதம் விதித்தார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த முருகேசு முத்துலிங்கம் தெல்லிப்பழையிலுள்ள தமது சலூனில் தெல்லிப்பழையைச்சேர்ந்த செபமாலை பங்கிராஸ் என்பவருக்கு முடிவெட்ட மறுத்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்

[8-ம் பக்கம் பார்க்க]

# 1,200 டாக்டர்கள் இன்று 'போராட்டத்'தில் குதிப்பர்

## காணமற்போன வியாபாரி கண்டுபிடிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த இரண்டு தினங்களுக்கு திடீரென காணமல்போன கிளிநொச்சி வாசியான இருல் வியாபாரி கார்வாலியோ பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் திடீரென காணமல்போனது சம்பந்தமாக பொலிசாருக்குக்கிடைத்த பல இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து உடனடியாக கிளிநொச்சிப் பொலிசார் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகளின் பயனாகவே கார்வாலியோ நேற்று நள்ளிரவு காடொன்றுள் கண்டு பிடிக்கப்பட்டாராம்.

கார்வாலியோவைக் கடத்திச்சென்றது சம்பந்தமாக இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக மேலும் மூவரை பொலிசார் தேடி

[8-ம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரி வேலைகள் மெதுவாக நடைபெறும்

கொழும்பு, ஞாயிறு

இன்று அரசாங்க ஆஸ்பத்திரிகள் அனைத்திலுமுள்ள சுமார் 1,200 டாக்டர்கள் மெதுவாக வேலை செய்வார்கள் என்பது நிச்சயமாகி விட்டது.

அரசாங்க வைத்திய சேவை சங்கத்தின் தலைவர் டாக்டர் ஆர். பி. ஜயவர்தன இன்று கருத்து வெளியிடுகையில், சுகாதார மந்திரியுடன் பேசுவதற்கு தாம் இன்னும் உத்தியோகபூர்வமாக அழைக்கப்படவில்லை என்றும் அதனால் மெதுவாக வேலைசெய்யும் திட்டம் நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்றும் 'ஈழநாடு' நிருபரிடம் கூறினார். மேலும் நாட்டிலுள்ள டாக்டர்கள் அனைவரையும் இதில் பங்கு கொள்ளும்படியும் அவர் கோரியுள்ளார்.

இதற்கிடையில் சுகாதார மந்திரி பொது மக்களுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் ஆஸ்பத்திரிகளில் தங்கி சிகிச்சை பெறவிரும்பாத நோயாளிகள் டாக்டர்களின் பேச்சைக் கேட்டு ஆஸ்பத்திரிகளில் தங்க வேண்டாம் என்றும், அவசியமாகத் தங்க வேண்டும் என்றால் மட்டுமே அப்படி செய்யும்படியும் கோரியுள்ளார். மந்திரி தற்பொழுது வெளியூர்களில் உத்தியோக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

டாக்டர் ஜயவர்த்தன இன்று லேடி ரிஜ்வே வைத்தியசாலைக்குப் போய் பா

[8-ம் பக்கம் பார்க்க]

5 எம். பி.க்கள் மீதான

## லஞ்சகுற்றச்சாட்டு விசாரணைக்கு சபாநாயகர் அனுமதி மறுப்பு

### சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லாததே காரணம்

கொழும்பு, சனி

ஐந்து பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள லஞ்சக் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக விசாரணை நடத்த லஞ்ச விசாரணைக் கமிஷனருக்கு அனுமதி வழங்க சபாநாயகர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கெதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றிய சாட்சியங்கள் திருப்திகரமானதாகவில்லையென லஞ்சக் கமிஷனருக்கு சபாநாயகர் அறிவித்துள்ளார்.

லஞ்சக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள ஐவரில் இருவர் தமிழ் எம்.பி.க்கள் எனத் தெரிய வருகிறது

எம்.பி.க்களுக்கெதிராக உள்ள லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் சபாநாயகர் அனுமதியின்றி நடத்தப்பட முடியாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சபாநாயகர் அனுமதியின்றியே எம்.பிக்களுக்கு எதிராகவுள்ள லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் பற்றிய பூர்வாங்க விசாரணையைக் கமிஷனர் நடத்தக் கூடிய வகையில் சட்டத்தை திருத்தி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

விவசாயிகளுக்கு

## கடன் தொகை உடனடியாக கூடும

கொழும்பு, சனி

நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையை உடனடியாக கூட்டுவதற்கு உணவு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி 6 ஏக்கர்வரையிலுள்ள நெற்காணிகளுக்கு வழங்கப்பட்டுவந்த ரூ 175 கடன் தொகை 10 ஏக்கர் காணிவரை 225 ரூபாயாக கூட்டப்படும் விதைநெல், அறுவடை ஆகிய அம்சங்களுக்கும் இந்தக் கடன் செல்லுபடியாகும்.

## மோசடிகாரர்களை கண்டுபிடிக்க புதிய பிரிவு

கொழும்பு, சனி

கள்ளச் சந்தைக்காரர்களையும், பதுக்கல் பேர்வழிகளையும், மோசடிகாரர்களையும் கண்டுபிடிப்பதற்காகக் கொழும்பு பெரிய பொலிஸ் நிலையத்தில் புதிய பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இந்தப் பிரிவுடன் தொடர்புகொண்டு ரகசியத் தகவல்களைக் கொடுக்கலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை அரிசி இந்தியாவில் விற்பனை?

### சுங்கப்பகுதியினர் கண்காணிப்பு

கொழும்பு, சனி

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாக அரிசி கடத்தப்படுவதாக சுங்கப்பகுதியினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை தொடர்ந்து சுங்கப்பகுதியைச் சேர்ந்த விசேஷ அதிகாரி ஒருவர் கிழக்கு மாகாணத்துக்கு சென்றுள்ளார்.

இதுசம்பந்தமாக பொலிசார் மத்தளை, மகியங்கம், கலவேவா ஆகிய இடங்களில் பரிசோதனை நடத்தி வருகின்றனர்.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய இலங்கை வர்த்தகர் ஒருவர் இலங்கை அரிசி தென்னிந்தியாவில் பகிரங்கமாக விற்பனை செய்யப்படுவதாகவும் சில இடங்களில் 7 ரூபா முதல் 14 ரூபா வரை விற்கப்படுவதாகவும் சுங்கப் பகுதியினருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்தே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.


சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இரு விமான விபத்துகள்

## 60 பேர் கொல்லப்பட்டனர்

வாஷிங்டன், ஜூன் 24

பி. ஓ. ஏ. ஸி. விமானமொன்று, நேற்று அமெரிக்க நகரான பென்சில்வேனியாவில் விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர்.

நியூயோர்க்கிலிருந்து வாஷிங்டன் சென்றுகொண்டிருந்த இவ்விமானம். பென்சில்வேனியாவுக்கருகில் தீப்பிடித்ததன் விளைவாக விபத்துக்குள்ளாகியது.

மற்றுமோர் அமெரிக்க நகரமான வடக்கு கரோலினாவில் துருப்புகளைக் கொண்டு சென்ற இரு 'ஹெலிகோப்டர்' விமானங்கள் ஒன்றோடொன்று மோதியதன் விளைவாக 29 பேர் கொல்லப்பட்டனர்.

ஒரு காட்டுப்பகுதிக் கருகிலேயே இரு ஹெலிகோப்டர்களும் மோதின.

## பஸ் நிலையத்தில் இடம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாதாந்த சீசன் டிக்கட் பெறவும் தூர இடங்களுக்கான பஸ் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும் யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 28-ம் தேதி முதல் புதிய பஸ்நிலையத்தில் பிரயாணிகள் ஆசனங்களை பதிவுசெய்வதோடு சீசன் டிக்கட்டுகளையும் பெற்றுக்கொள்ளலாமென்றும், யாழ்ப்பாணம் பஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு.ராஜா நல்லைநாதன் அறிவித்துள்ளார். ——

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

### ஞாயிறு 25 - 6 - 67

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அகதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-30 வீணை, 6-45 கிறிஸ்தவஆராதனை, 7-15 பாட்டு — இராணி பத்மநாதன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர்கேட்டவை.

## யாழ்ப்பாணத்திலுள்ள 250 பேருக்கு நிலம் கிடைக்கும்

உடுவில், சனி

முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 250 காணித்துண்டுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படவிருக்கின்றன. இதற்காக விவசாயிகள், விவசாயப் பயிற்சி பெற்ற வாலிபர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

இந்தக் காணித்துண்டுகள் வழங்குவதில் குடும்ப நிலையிலும் பார்க்க, கிருஷிக அறிவும், திறமையும்கொண்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் எனவும் சிறிய குடும்பங்களுடன் கிருஷிக அறிவும் கொண்ட இளம் விவசாயிகளுக்கு தகுந்த கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிகிறது.

தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்க செலவில் குடியேற்றத் திட்டத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு பகுதிபகுதியாக ஒவ்வோர் பிரிவுக்கும் 30 ஏக்கர் வீதம் காணி கொடுக்கப்படுமாம். இவ்வருட பெரும்போகத்திலோ அல்லது அதற்கு முன்னரோ நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கஉத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கலைக்கோவிலுக்கு கட்டடம்

செட்டிபாளையம், வெள்ளி

கடந்த ஐந்து வருட காலமாக நடனக் கலைப்பணி புரிந்து வரும் கி.இ. இசை நடனக் கலைக் கோவிலுக்கு ஒரு நிரந்தரக் கட்டடம் அமைக்க கலை நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டப்படவிருக்கிறது.

## வரவேற்பு வைபவம்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை புனித என்றியரசர் கல்லூரி அதிபராக இருந்து தற்போது திருகோணமலையின் உதவி மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டிருக்கும் வந்தனை: ப. தியோகுப்பிள்ளைக்கு என்றியரசர் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் அடுத்தமாதம் ஒரு வரவேற்பு வைபவம் நடாத்தவிருக்கின்றனர். யாழ்ப்பாணம், கரம்பன், இளவாலை ஆகிய இடங்களிலும் வரவேற்பு வைபவங்கள் நடைபெறவிருக்கிறது.

## பொதுக கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டுறவு அபிவிருத்திஉதவிப் பரிசோதகர் திரு. சி. சண்முகராசா தலைமைவகித்தார். கீழ்க்கண்டோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். ஜேக்கப், செயலாளர்: திரு. ஜே. அன்ரனி, தனாதிகாரி திரு. வி. நாகநாதி, உபதலைவர்: திரு. ஏ. அரியகுட்டி. திருவாளர்கள். ஜே. செல்வம், யே. எம். ராசுதாஸ், அ. பிலிப், அ. பொலிக்காப், ச. இராசையா ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ——

## 'ஆசிரியர் இடமாற்றம்' பற்றி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஆசிரியருக்கு இடமாற்றம் வேண்டுவதாமோ?' என்பது பற்றிய கருத்தரங்கு இம்மாதம் 28-ந் திகதி காலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க தென்மராட்சிக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது இக்கருத்தரங்கம் இடம் பெறும்.

திரு. எஸ். நல்லையா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திருவாளர்கள் த. சண்முகநாதன், அ. பொன்னம்பலம், ஐ. ஆ. இராமசாமி, வ. தங்கராசா, அ. குமாரவேலு ஆகியோர் பங்குபற்றுவார். ——

## 'பொருளாதாரம் பெருக உழையுங்கள்'

ஊர்காவற்றுறை, சனி

'தீவுப்பகுதியில் நெடுந்தீவின் பொருளாதாரம் குறைவாக இருப்பதால் நெடுந்தீவு மக்கள் தம் கவனத்தை விவசாயத்துறையிலும் சிறு கைத்தொழில்களிலும் திருப்ப வேண்டும். வெங்காயக்கூடு பின்னும் தொழில் அதிக வருவாய் தருவதாகும்' என்று மாற்றலாகிச் செல்லும் நெடுந்தீவுக்காரியாதிகாரி திரு. அருணசலம் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் கூறினர்.

## பாடசாலைக்கட்டிடம் திருத்த கோரிக்கை

ஊர்காவற்றுறை, சனி

நெடுந்தீவு மாவலித்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் அமைப்புக் கூட்டம் கடந்தவாரம் நடைபெற்றது.

பாடசாலைத்தலைமை ஆசிரியை திருமதிசெபரத்தினம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டத்தில் பாடசாலையின் அபிவிருத்திபற்றி ஆலோசிக்கப்பட்டது.

பழுதடைந்த நிலையில் இருக்கும்மேற்படிபாடசாலையின் கட்டிடத்தைத் திருத்தம் செய்து தருமாறு கல்விப்பகுதியினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மூன்றே மாதத்தில் இலக்கண முறையில் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கு வகுக்கப்பட்ட நூல் Rs. 1-50, P. V. D. ஞானராஜ், த. பெ. எண் 357, கொழும்பு. 1895

## கயரோக சங்கம் நடத்தும் போட்டி

பண்டத்தரிப்பு, சனி

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வலி.மேற்கு கயரோக நிவாரண சங்கத்தினர் கட்டுரைப்போட்டி. பொது அறிவுப்போட்டி, சித்திரப் போட்டி, நாடகப் போட்டி, சங்கீதப் போட்டி என்பன இம் மாதம் நடத்தத் திர்மானித்துள்ளதாகவும், போட்டி சம்பந்தமான விபரங்களையும் போட்டி நடைபெறும் நிலையங்களையும் சங்கக் காரியதரிசியிடம் அறிந்து கொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ——

## மாடுகள் களவு

கோப்பாய், சனி


கோப்பாய்ப் பகுதியில் பொலிஸ் நிலையத்திற்கண்மையில் கடந்த சில நாட்களாகப்பலமாடுகள் திருட்டுப்போயிருக்கின்றன. இது குறித்து பொது மக்கள் பொலிசில் புகார் செய்தபோதிலும்இதுவரைஎதுவித நடவடிக்கையும்எடுக்கப்படவில்லையெனத்தெரிகிறது.




தலைவலி, தடிமல், டெங்குச் சுரம், காய்ச்சல், பல்வலி, இவற்றிலிருந்து துரிதமான, பாதுகாப்பான, வன்மையான நிவாரணம் தந்து, தசைநார் வலிகள் நோவுகளைத் தணிப்பது டிஸ்பிரின்.

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், நிச்சயமாகவே வன்மையான பாதுகாப்பான நிவாரணம் தந்திருக்கின்றன. அதனுல் தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிருர்கள்.

டிஸ்பிரின், முற்றுகக் கரைவதும் இரத்தோட்டத்தில் உடனே செறிவதுமாகையால், அதி துரித நிவாரணம் தருகிறது.




டிஸ்பிரின் பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

RC 165


றெக்கிட் அன்ட் கொல்மன் தயாரிப்பு.

## "ரா லே ஞ"

உங்கள் சொகுசுக்கேற்ற

சாமான்கள்

O ஸ்பிரிங் கட்டில் பிரேம்கள், எல்லா அளவிலும்



- O டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- O டிலைட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- O ஆஸ்பத்திரி கட்டில்கள்
- O டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
- O ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
- O பஞ்சு - தும்புமெத்தைகள்
- O ஸ்பிரிங் மெத்தைகள்
- O குழந்தை தொட்டில்
- O மெத்தை ஸ்பிரிங்குகள்
- O திரைகள்
- O சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

**த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,**

62, புளுமெண்டால் ரோட்,

கொழும்பு-13.

தொலைபேசி: 2233/34

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்க-ரஷ்ய உச்சிமாநாடு

# ஜோன்சன் - கொஸிஜின் பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றன

நியுயோர்க், ஜூன் 24

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுக்கும், ரஷ்யப் பிரதமர் கொஸிஜினுக்குமிடையே நேற்று கிளாஸ்பரோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், 5 மணித்தியாலங்களுக்கும் மேல் நீடித்தன. பேச்சுவார்த்தைகளின் இறுதியில் இருதலைவர்களும் நாளை மீண்டும் சந்திப்பதாக அறிவிக்கப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகளில் ரஷ்யப்பிரதமர் கொஸிஜினுக்கு உதவியாக, சோவியத் வெளியுறவு மந்திரி குரோமிக்கோவும், சோவியத் தூதுவரும் பங்குபற்றினர். ஜோன்ஸனுக்கு, உதவியாக அமெரிக்க ராஜாங்க பாதுகாப்பு மந்திரி டீன் ரஸ்கும், வெளியுறவு மந்திரி மக்னமாராவும் கலந்து கொண்டனர்

பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஜோன்ஸன் வெளியிட்ட அறிக்கையில், தானும் கொஸிஜினும் பல பிரச்னைகளையிட்டுக் கருத்துக்கள் பரிமாறிக்கொண்டதாகக் குறிப்பிட்டார். அணு ஆயுதத்தடைபற்றி இரு நாடுகளும் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினர்.

மேற்கு ஆசியாவில் போர் நிறுத்தம் ஏற்படுத்தியதையிட்டு ஜோன்ஸன் திருப்தி தெரிவித்தார். ஆனாலும் அங்கு மீண்டும் போர்நடவடிக்கைகள் கிளம்பக்கூடுமென்பதையிட்டுத் தமது கவலையையும் தெரிவித்தார்.

## மிகபயனுள்ள பேச்சுவார்த்தைகள் என ஜோன்சன் கூறுகிறர்

'மிக நல்ல, பயனுள்ள பேச்சுவார்த்தைகள்' என அவர் தமக்கும் கொஸிஜினுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளின் பின், இரு தலைவர்களும் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டு வெளியே வந்தனர்.

## இரு தலைவர்களும் நாளை மீண்டும் சந்திக்கின்றனர்

கிளாஸ்பரோவில் நாளைக்கு இருதலைவர்களும் மீண்டும் சந்திப்பது, கொஸிஜின் விருப்பத்தின் பேரிலேயே என அமெரிக்க வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. மேற்குஆசியா, வியட்னாம், அணு ஆயுதத்தடை ஆகிய விஷயங்களை பற்றி இரு தலைவர்களும் கருத்துக்கள் பரிமாறிக்கொண்டனர்.

### ரஸ்க்-குரோமிகோ

இரு நாடுகளுக்கிடையேயானபேச்சுவார்த்தைகளின் தொடரில், அமெரிக்க ராஜாங்க பாதுகாப்புமந்திரி டீன் ரஸ்கும், ரஷ்ய வெளியுறவு மந்திரி குரோமிகோவும் நாளை நியுயோர்க்கில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள்.

### கொஸிஜின் கைகுலுக்கினர்

நேற்று இருநாட்டுத் தலைவர்களுடைய பேச்சுவார்த்தைகளும் முடிவடைந்து. அவர்கள் சந்தித்த மாளிகையை விட்டு வெளியே வரும்போது, ரஷ்யப் பிரதமர் தமது காருக்குச் செல்லும் வழியில், அங்கு குழுமி நின்று கரகோஷம் செய்த மக்களிடையே சடுதியாகச் சென்று, பலருடனும் நேரில் கைகுலுக்கினர்.

முன்னதாக குழுமி நின்ற மக்களிடம் பேசுகையில், 'நான் சமாதானத்தை நாடியே இங்கு வந்திருக்கிறேன்' என்று ரஷ்யப் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

### ஐ நா. வில் மகிழ்ச்சி

ஐ.நா.வில், இரு நாட்டுத் தலைவர்களினதும் உச்சிமகாநாட்டைப்பற்றி மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. அணு ஆயுதத் தடைப் பிரச்னையிலாவது, இப்பேச்சுவார்த்தைகளின் பயனாக ஓர் உடன்பாடு ஏற்படலாமென ஐ. நா. வட்டாரங்கள் கருதுகின்றன.

இப் பேச்சுவார்த்தைகளை அக்கறையுடன் பின்தொடரும் ஐ நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் அவை பற்றி எதுவும் குறிப்பிட மறுத்துவிட்டார்.

பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான பலன்களை அளிக்குமென அமெரிக்க அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### பிரவுண் புறப்படுகிறர்

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி பிரவுண், இன்று நியுயோர்க்கிலிருந்து லண்டன் புறப்படுகிறர், நாளைய ஜோன்ஸன்-கொஸிஜின் சந்திப்பு, அவரது பிரயாணத்தைப் பாதிக்காது எனத் தெரியவருகிறது.

---

## பிரான்சின் ஜலவாயு குண்டு

பாரிஸ், ஜூன் 24

பிரான்ஸ் தனது ஜலவாயு குண்டொன்றை அடுத்த வருடம் வெடிக்குமென இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு பசிபிக் பகுதியில் வெடிக்கப்படுமென்த் தெரிகிறது.

---

## காணவில்லை

காங்கேசன்துறை, வெள்ளிமயிலிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி பங்கராசா என்பவரின் 25 ஆயிரம்ரூபா பெறுமதியான ''காணிக்கமாதாச்செல்வி'' என்னும் இயந்திரப்படகும் அதனுடன் 10ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளும் நான்குநாட்களாகியும்காணவில்லை இதுபற்றி காங்கேசன்துறைப்பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## சிரமதானக் குழு உறுப்பினர்

உடுவில், சனி

சங்குவேலி உணவுற்பத்தி-சிரமதான அபிவிருத்திக் குழுக்கூட்டம் உடுவில் கிராமசேவையாளர் தலைமையில் நடைபெற்றது' குழு நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர்-திரு.கே. கந்தசாமி உபதலைவர்-திரு.எஸ். சண்முகலிங்கம், இணைக்காரியதரிசிகள்-திரு.சு. செல்லத்தம்பி எஸ்.எஸ்.சின்னத்தம்பி, தனாதிகாரி-திரு.மு. இராமலிங்கம்.

## பொட்கோர்ணி-நாஸர் பேச்சுவார்த்தைகள் முடிந்தன

### ரஷ்ய — ஐ. அ. கு. ஆயுத ஒப்பந்தம்

கெய்ரோ, ஜூன் 24

சென்ற புதன்கிழமை கெய்ரோவுக்கு வந்த ரஷ்ய அதிபர் பொட் கோர்ணி, இன்று மாஸ்கோவுக்குப் புறப்படுகிறர்.

ஐ. அ. குடியரசு ஜனாதிபதி நாஸருடன் நேற்றுத் தமது இறுதிச் சுற்றுப்பேச்சுவார்த்தைகளை பொட் கோர்ணி முடித்துக்கொண்டார்.

இப்பேச்சுவார்த்தைகளின் பயனாக, ரஷ்யாவுக்கும் ஐ. அ. குடியரசுக்குமிடையே ஓர் ஆயுத ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## 'தொழிற்சாலைகளை அமைக்கும் அறிவாற்றல் எம்மிடமுண்டு'

### தமிழக முதல் மந்திரி அண்ணா கூறுனரை

சென்னை, ஜூன் 24

''தமிழ்நாட்டில் நிறைய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்'' என்று தமிழக அரசின் முதல்மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை வற்புறுத்திக் கூறியுள்ளார்.

சென்னை, செம்பியத்திலுள்ள 'இந்தியா பிஸ்டன்' கம்பெனியின் புதிய பிரிவின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவுக்கு முதல்மந்திரி திரு. அண்ணாதுரை தலைமை தாங்கினர்.

புதிய பிரிவைத் திறந்து வைத்துப் பேசுகையில் முதல் மந்திரி கூறியதாவது:

''சிறந்த மோட்டார் பாகங்களை உற்பத்தி செய்து நம்நாட்டுத் தேவைக்கு மட்டுமல்லாது வெளிநாடுகளுக்குக்கூட அவற்றை அனுப்புவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இது, குறுகிய காலத்தில் நாம்

[6-ம் பக்கம் பார்க்க]

## ஐ.அ.குடியரசின்/குற்றச்சாட்டுகளை இஸ்ரேல் மறுத்துள்ளது

### ஐ. நா. பொதுச்சபை விவாதம் தொடருகிறது

### ஜோர்தான் மன்னர் ஐ. நா. வருகிறர்

நியுயோர்க், ஜூன் 24

நேற்று மாலை ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம், தொடர்ந்து மேற்கு ஆசிய விவகாரத்தை விவாதித்தது.

கூட்டத்தில் பேசிய இஸ்ரேல் பிரதிநிதி, தனது நாடு யுத்தக் கைதிகளைக் கொடுமைப்படுத்துவதாகவும், பாலஸ்தீன அரபியர்களை அவர்களது இல்லங்களிலிருந்து துரத்துவதாகவும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

முன்னதாக இக் குற்றச்சாட்டுகளை, ஐ. அ. குடியரசுப் பிரதிநிதி, இஸ்ரேல் மீது சுமத்தியிருந்தார்.

### ருமேனியா கோரிக்கை

இஸ்ரேலையும், அரபு நாடுகளையும், பிரச்னைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கும்படி ருமேனியப் பிரதமர் கேட்டுக்கொண்டார். மற்றைய கம்யூனிஸ்ட் நாடுகள் [illegible] இஸ்ரேலையே ஆக்கிரமிப்பு நாடு எனக் கண்டிக்கா[illegible]

அதனுடையசுதந்திரப்போக்கிற்குப்பிறிதொரு உதாரணமாகப் பார்வையாளர்களால் கொள்ளப்பட்டது.

அமெரிக்க உதவி இல்லாவிடில், இஸ்ரேல் போரைத் தொடங்கியிருக்க முடியாதென்று பைலோ—ரஷ்யப் பிரதிநிதி அமெரிக்காவைக் கண்டித்துப் பேசினர்.

### ரஷ்யாவுக்கு ஆதரவு

ஹங்கேரிப் பிரதமர், கினி வெளியுறவுமந்திரி போலிஷ் பிரதமர் ஆகிய மூவரும், இஸ்ரேல் தனது துருப்புகளை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்ற சோவியத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

கியூபாப் பிரதிநிதி, மேற்கு ஆசிய விவகாரத்தில் அமெரிக்கா கடைப்பிடித்த கொள்கையைக் கண்டித்தார். அமெரிக்காவே இஸ்ரேலுக்கு உதவியளித்து, அதைத் தூண்டிவிட்டதாக அவர் குற்றஞ்சாட்டினர்.

### மன்னர் ஹுசெயின் ஐ.நா. வருகிறர்

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஜோர்தான் மன்னர் ஹுசெயின், இன்று நியூயோர்க்குக்குப் புறப்படுகிறர். நியூயோர்க் வரும் வழியில், அவர் பாரிஸில் இறங்கி, பிரெஞ்சு ஜனாதிபதி டிகோலுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார்.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில், திங்கட்கிழமையன்று மன்னர் ஹுசெயின் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடாளும் மன்னர் ஒருவர், ஐ. நா. பொதுச்சபையின் அரசியல் விவாதமொன்றில் கலந்து கொள்ளுவது இதுவே முதற்தடவையாயிருக்கும். ஒரு நாட்டின் அதிபர் ஐ. நா. பொதுச்சபையில் பேசுவது இது இரண்டாவது தடவையாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அச்சம் எங்குள்ளதோ அங்கு அமைதி இல்லை. அதிருப்தி, பரபரப்பு, ஒழுங்கீனம் முதலிய தீமைகள் பரவுகின்றன. நமக்குள்ளே இருக்கும் தெய்வத்துடன் நாம் லயப்பட்டுவிட்டால், நமக்கு நாம் அமைதி அடைந்து, சாந்தி அலைகளை மற்றவர்களுக்கும் பரப்ப முடியும்.

— சுவாமிராமதாஸ்


# ஈழநாடு

...nadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

... பிலவங்க ஞு ஆனி 11உ (25 6-67)


## உயிருடன் விளையாட்டா?

நாடு முழுவதிலுமுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் டாக்டர்கள் ... இன்றுமுதல் 'மெதுவாக' வேலை செய்யும் இயக்கம் ஆரம்பிக்க முடிவு செய்துள்ளனர். இது உயிருடன் விளையாடுவதாகும். உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில் வரும் நோயாளியிடம்கூட டாக்டர்கள் 'மெதுவாக வேலை' செய்யும் இயக்கம் காரணமாக அசட்டை காண்பித்தால் அது ஆபத்தாகவே முடியும். டாக்டர்கள் தங்களுக்குள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வேறு வழிகளைக் கையாள்வதே நியாயம். நோயாளிகள் விஷயத்தில் 'மெதுவாக வேலை' செய்வது நல்லதல்ல. மனிதப் பண்புமல்ல.

ஒரு நோயாளியைக் கவனமாகப் பரிசோதனை செய்யாது அந்த நோயாளியின் நோயைக் கண்டு கொள்ளாமல் ஒரு நோயிருக்க வேறொரு நோய்க்கு மருந்து கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் மீது ஒரு டாக்டர்மீது சுகாதார இலாகா நடவடிக்கை எடுத்ததை ஆட்சேபித்தே இந்த டாக்டர்கள் அதாவது அரசாங்க வைத்திய அதிகாரிகள்சங்கம் இந்த 'தாமதவேலை' இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது. ஆஸ்பத்திரிகளில் வந்து குவியும் நோயாளிகளை ஆறஅமரப் பரிசோதிப்பதற்கு டாக்டர்களுக்குப் போதிய நேரம் இல்லையென்றும் ஆஸ்பத்திரிகளில் தேவையான டாக்டர்கள் இல்லையென்றும் இன்னும் தங்களுக்கு எவ்வளவோ குறைகளிருப்பதாகவும் டாக்டர்கள் கூறுவதில் உண்மை இல்லாமலில்லை. எந்த ஒரு டாக்டர்மீது சுகாதார இலாகா திடீர் என நடவடிக்கை எடுத்துவிட்டதால் சுகாதார இலாகா ஏதோ நேர்மையாகவும் திறமையாகவும் இயங்குகிறதென்பதும் அர்த்தமல்ல. இதற்காக டாக்டர்கள் நோயாளிகளின் உயிருடன் விளையாட வேண்டுமென்பது நியாயமுமல்ல.

டாக்டர்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள வேறு வழிமுறைகளைக் கையாளலாம்; சுகாதார இலாகாவும் டாக்டர்களின் குறைகளை அறிந்து அவற்றைக் களைந்து டாக்டர்கள் திருப்தியுடன் பணிசெய்ய வழி காண வேண்டியது அவசியம்.

## சாரணீயக் கொடி பெறுவர்

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சாரண மாணவர்கள் அகில இலங்கைச் சாரணீயக் கொடியைச் சுவீகரித்துள்ளனர். இவர்கள் இம்மாதம் 28-ந் திகதி கண்டியில் நடைபெறும் சாரணர்விழாவில் சாரணர் இயக்க கமிஷனரிடம்சாரணீயக்கொடியைப் பெறுவர்.

## தேவாலயம் திருத்தினர்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை சென். ஜேம்ஸ் இளைஞர்கள் தமது தேவாலயத்தின் திருத்த வேலைகளை சிரமதானம் மூலம் செய்து வருகின்றனர். ஆலய உற்சவம் அண்மையில் நடைபெறவிருக்கிறது.

## உள்நாட்டு உற்பத்திப் பொருள்

இலங்கையின் உற்பத்திப் பொருள்களுக்குநியாயமான விலை கிடைக்காதது பற்றி ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கூட்டத்தில் திரு. தொண்டமான் சரியாகச் சுட்டிக்காட்டி, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைப்பதன்மூலம் அந்தநாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்படுமென்றும் இதனால் ஏற்படும் நஷ்டத்தை வெளிநாட்டு 'உதவிகள்' ஈடுசெய்ய முடியுமா என்றும் கேட்டிருக்கிறார்.

'வெளிநாட்டு நிபுணர்கள் வருகிறார்கள், போகிறார்கள்; அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறார்கள். பயன் எதையும் காணோம். எங்களுக்கு எதையும் அள்ளிக் கொடுக்கவேண்டாம். எங்கள் உற்பத்திப்பொருள்களுக்கு நியாயமான விலை கொடுத்தால் போதும்' என்று அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தன சில மாதங்களுக்குமுன் சுட்டிக்காட்டியிருந்ததும் இதே கருத்துடன்தான்.

உலகசந்தையில் ரப்பர் மலிவாக இருக்கும் போது பணம்படைத்த அமெரிக்கா அதை வாங்கிக்குவித்துவைத்து [பதுக்கல் செய்து] ரப்பர் விலை அதிகரிக்கும் சமயத்தில் அதை விற்பனைக்கு விட்டு இலங்கைபோன்ற ரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் வருமானத்தைப் பாதிக்கச்செய்து வயிற்றிலடிக்கிறது. ரப்பரில் மட்டுமல்ல சிறியநாடுகளின் இதர உற்பத்திப்பொருள்கள் அனைத்தின் விஷயத்திலும் பெரியவல்லரசுகள்இப்படித்தான் நடந்து கொள்கின்றன. இவைகளைச் செய்துவிட்டு உதவி என்னும் பெயரால் இந்த நாடுகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைகின்றன. சிறியநாடுகள்மீது நல்லெண்ணமிருந்தால் அவைகளின் உற்பத்திப்பொருள்களுக்கு ஓர் உத்தரவாத விலைத்திட்டத்தைக் கொண்டுவரலாமே.

இதேசமயம் இலங்கை தேயிலை, ரப்பர் போன்ற, வெளிநாட்டுப்பணம் சம்பாதிக்கக்கூடிய பொருள்களின் உற்பத்தியை மட்டும் நம்பியிருக்காமல், நமதுதேவையைப்பூர்த்தி செய்யக்கூடிய அத்தியாவசியப் பொருள்களின், [வெளிநாடுகளின் உதவியை எதிர்பார்த்திருக்காது] உற்பத்தியை அதிகரிக்க முன்வரவேண்டும்.

# 'பலமாதங்களாகியும் வேலைகள்பூர்த்தியாகவில்லை'

## மாவட்ட இணைப்பு குழுகூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. குறைபாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

''மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி வேலைகள் பலமாதங்களாகியும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நாங்கள் இங்கு வந்துபொன்னான நேரத்தை மண்ணாக்க வேண்டுமா? இங்கு வந்து பேசிவிட்டால் மட்டும் பயனில்லை. அதை செயல்படுத்த வேண்டும். இவ்வேலைகளை உத்தியோகத்தரினால் செய்யமுடியவில்லையானால், மந்திரிகளுடன் தொடர்புகொண்டுதான் செய்யவேண்டும்.''

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி திரு. கா. பொ. இரத்தினம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி காரியாதிகாரி கந்தோருக்கு இரு லிகிதர்களை நியமிக்கவேண்டுமென கிளிநொச்சி எம். பி. கேட்டபோது இவ்விஷயமாக காரியாலய உதவியாளரைத்தான் கேட்கவேண்டுமென அரசாங்க அதிபர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து கிளிநொச்சி எம். பி. அங்கிருந்த ஓ. ஏயிடம் லிகிதர்கள்பற்றிக் கேட்டார்.

ஓ. ஏ: லிகிதர்கள் வைப்பதற்கு திறைசேரி சம்மதிக்கவேண்டும். இங்கு ஏற்கனவே 12 லிகிதர்கள் அனுப்பப் பட்டுள்ளார்கள். அவர்களால் தமிழிலோ ஆங்கிலத்திலோ வேலை செய்யமுடியாமலிருக்கிறார்கள்.

கிளிநொச்சி எம். பி: அரசாங்க பணம் வீணாகிறது. தமிழ் தெரிந்தவரை அனுப்பினால் என்ன?

ஓ. ஏ: திறைசேரி மூலம் தான் லிகிதர் பெறமுடியும்.

இலங்கை போக்குவரத்து சபை பிராந்திய மனேஜர் உதவிமனேஜர் கூட்டத்தில் சமூகமளியாததையிட்டு கவலைதெரிவித்த கிளிநொச்சி எம். பி. பஸ் சேவை பற்றிய ஒரு மகாநாட்டை கூட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பஸ்கள் பற்றுக்குறையினால்தான் புதிதாக சேவைகள் ஆரம்பிக்கமுடியாமலிருப்பதாகவும் பழைய சேவைகளில் சில நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இலங்கை போக்குவரத்துசபை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கிளிநொச்சி எம். பி: விரைவில் புதிய பஸ்கள் வரவிருப்பதாக அறிகின்றேன். பஸ்கள் வந்ததும் புதிய சேவைகள் ஆரம்பிக்கவேண்டியது அவசியம் கிளாலிபஸ்சேவைகூட நிறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் நிலைமை இப்படியானால் புதிய சேவைகள் எப்படி ஆரம்பிக்கமுடியும்.

முறுகண்டி புகையிரத நிலையம் பற்றி இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென்றும் கரடிப்போக்கு, பரந்தன், கிளிநொச்சி பகுதிகளில் புகையிரத கடவை வேண்டும் என்றும் கிளிநொச்சி எம். பி தெரிவித்தார்,

42 கிராமசபைகளுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய பட்டியலை பார்வையிட விரும்பிய கிளிநொச்சி எம். பி திரு க. பொ இரத்தினம் அப்பட்டியல் தனிச்சிங்களத்தில் இருந்ததால் மொழிபெயர்ப்பு வேண்டும் என்றார். மொழிபெயர்ப்பு இல்லாததால் சுருக்கெழுத்தாளரின் உதவியால் புலோற்பளை கிராமசபைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நன்கொடையைஅறிந்துகொண்டார்.

சில கிராமசபைகளுக்கு நிதியுதவி காணுதென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## ''கிராமங்கள் தோறும் சித்திர கண்காட்சி அமைப்பது அவசியம்''

யாழ்ப்பாணம், ஞாயிறு

''யாழ்ப்பாணத்திலுள்ள கலை, கலாச்சார, சித்திர நிபுணர்களின் திறமைகளைப் பல தடவைகள் பத்திரிகைகள் மூலம் அறிந்திருந்த போதிலும் அவர்களது கலைத்திறனை இன்றே நேராகக்காணும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தக் கலைக் காட்சிக்கூடத்துக்குள் நிற்கும்போது இலங்கையின் பல பகுதிகளிலும் நிற்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது.''

மேற்கண்டவாறு யாழ்ப்பாணப்பகுதி சித்திர ஆசிரியர்களால் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சித்திரக் கண்காட்சியைப் பார்வையிட்ட கல்வி கலாச்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் மகாவித்தியாதிபதியுமான திரு. எம் ஜே. பெரேரா தெரிவித்தார்.

திரு. பெரேராவையும், வடமாநில வித்தியாதிபதி திருமதி நவரத்தினத்தையும் கல்லூரி முன்றலில் மகாவித்தியாலய அதிபர் திரு. இராசதுரை வரவேற்று அழைத்துச்சென்று கண்காட்சியைக் காண்பித்தார்.

திரு. பெரேரா மேலும் தெரிவித்ததாவது: மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும், மனதிற்கு அமைதியும் அளிப்பன இப்படியான கலை, கலாச்சாரக் கண்காட்சிகளே. யாழ்ப்பாணத்திலுள்ள சகல ... சித்திர ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து இந்தக்காட்சியை ஒழுங்கு செய்தது வரவேற்கத்தக்கதாகும். ஆசிரியர்கள் தங்கள் கலைத்திறனை தமது மாணவர்களுக்கும் பயிலவிப்பதன் மூலம் அவர்களையும் சிறந்த கலை விற்பன்னர்களாக்கலாம் இதுமாத்திரமன்றி சித்திர ஆசிரியர்கள் மாதமொரு தடவையாவது கூடி இது பற்றிக் கலந்துரையாடுவதும், கிராமங்கள் தோறும் இப்படியான கண்காட்சிகளை அமைப்பதும் அவசியமாகும்.

சுமார் 10 க்கும் மேற்பட்ட கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வரையப்பட்ட சித்திரங்களும் செதுக்கப்பட்ட சிலைகளும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. [ந. நி.]

## ஜீவனாம்சம்கோரி தந்தை வழக்கு

ஊர்காவற்றுறை, சனி

காரைநகர் வடக்கு வாசியான கதிரன் ஆறுமுகம்என்பவர் தமது இரு மக்களும் தம்மையும் தமது மனைவியையும் தாபரிக்கத்தவறி விட்டார்களென ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். இந்த இருபுத்திரர்களில் ஒருவர் ஆசிரியராகவும் மற்றவர் லிகிதராகவும் கடமையாற்றுவதாக குறிப்பிட்டுள்ளார்.

# ஐயாறன் எழுதுகிறது

முந்தாநாள் பலாலி விமானநிலையத்திலே ஓர் அசாதாரணமான சம்பவம் நடந்ததாம். விமானத்தில் பிரயாணிகள் ஏறி, கதவையும் மூடி, ஏணிப் படியையும் அகற்றியாயிற்று. திருச்சிக்குப் புறப்படும் அவ்விமானத்தின் இஞ்சினை முடுக்கிவிட்டு, ஒரு விசிறி பலமாகச் சுற்றுகிறது. மற்றொரு விசிறியும் சுற்றப்போகிறது. அச்சமயம் விமான நிலையத்துக்கு மிகப் பரபரப்புடன் இரு பெண்களுடன் ஒருவர் ஓடிவந்தார். தாங்கள் அவ்விமானத்தில் செல்ல டிக்கெட் வாங்கியுள்ளதாயும், ஆனால் எதிர்பாராத காரணத்தால், தவக்கமாக வர நேரிட்டதாயும், எப்படியாவது அவ்விமானத்தில் தங்களை அனுப்பிவைக்கவேண்டுமென்றும் ஏயர்சிலோன் விமான அதிகாரிகளை மிக மன்றாட்டமாகக் கேட்டார். அவர்களது பரிதாப நிலைக்கு அதிகாரிகள் இரங்கி, ரேடியோ டெலிபோன் மூலம் விமானிக்குப் பேசி, விமானத்தைச் சற்றே நிற்பாட்டும்படி கேட்டனர். விமான விசிறி மெதுவாக நின்றது, கதவும் திறந்தது. ஏணி மீண்டும் வைக்கப்பட்டது மூன்று பிரயாணிகளையும் பதிவுசெய்து, விமானத்தில் ஏற்ற சுமார் கால் மணியாயிற்று. விமானத்தில் ஏறியிருந்த பிரயாணிகளுக்கு ஒன்றும்புரியவில்லை. விமானத்துக்குத்தான் ஏதாவது கோளாறோ என்று நினைத்துக் கீழே இறங்கிவிட்டனர். பிறகு எல்லாரையும் ஏற்றிக்கொண்டு, விமானம் புறப்பட்டதாக ஓர் அன்பர் வந்து தெரிவித்தார்.

மந்திரி முதலிய பிரமுகர்களுக்காக இப்படி விமானம் தாமதமாகப் புறப்படுவது சகஜம். ஆனால் சாதாரண பிரயாணிகளுக்காக, புறப்பட்ட விமானத்தையும் நிறுத்தி, அவர்களை அனுப்பிவைத்தது பெரிய காரியம். இதற்குப் பொறுப்பான இலங்கை விமான அதிகாரிகளைப் பாராட்டுகிறேன். பொதுமக்களே தங்களுக்குச் சம்பளம் கொடுக்கும் உண்மை எஜமானர்களென்றும், அவர்களுக்குத் தொண்டு செய்து அவர்களது அபிமானத்தைப் பெறுவதே தங்கள் கடமையென்றும், எல்லா அரசாங்க ஊழியர்களும் உணர்ந்து பணிசெய்தால், இந்நாடு எவ்வளவோ முன்னேறமுடியுமல்லவா?

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் சமீபத்தில் நடாத்திய சைவப் புலவர் பரீட்சையிலே சித்தி பெற்றவர்களுக்கு, சித்தாந்த கலைச்செல்வர் வஜ்ரவேலு முதலியார் பத்திரங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சி கரவெட்டியிலே வாணி கலைக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்றது. சித்தி பெற்றவர்களில் ஒருவர் கத்தோலிக்க பெண்மணி என்பதைக் காரியதரிசி வீரகத்தி அவர்கள் தெரிவித்த போது, கூட்டத்தினர் மகிழ்ச்சியுடன் கரகோஷம் செய்து, பாராட்டினர். சுமார் ஒன்றரை மாதகாலமாக ஈழத்திலிருந்து சைவசித்தாந்த வகுப்பு நடத்தி, பலருக்கு சைவசாத்திர உண்மைகளை மேலானமுறையில் விளக்கிய முதலியார் அவர்களை, ''மெய்கண்ட முதலியார்'' என்று அழைக்கலாமென்று காரியதரிசி கூறியதும், முதலியாரும் மற்றவருடன் சேர்ந்து சிரித்துவிட்டார்.

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "இலக்கியத்திற்கு தொல்காப்பியம் இலக்கணம் வகுத்திருக்கிறது"

## மட்டக்களப்பு தமிழ் விழாவில்

### அரசாங்க அதிபர் பேச்சு

செட்டிபாளையம், சனி

"புலவர்களின் உணர்ச்சி மேலீட்டால் நாம் போற்றும் இலக்கிய ஓவியங்கள். புலவனுடைய உள்ளத்தோடு ஒன்றுபட்டு வெளிப்படும் கவிகள் ஒருபோதும் அழியாதவையாகும். கவிகளுக்குள்ள வலிமை யாருக்கும் கிடையாது. இலக்கியம் என்பது ஒரு தனிக்கலை.

திறனாய்வுபற்றித் தற்பொழுது நாலா பக்கமும் குரல் எழுப்பப்படுகிறது. திறனாய்வுக்கலை மேலை நாட்டிலிருந்தே நம்நாட்டிற்கு வந்தது எனப் பலர் வாதாடுகின்றனர். இவ்வாறு கூறுபவர்கள் தொல்காப்பியத்தில் உள்ள மெய்ப்பாட்டியலைக் கற்றுணர்ந்தார்களா என்பது சந்தேகமே. இலக்கியம் எவ்வாறு அமைய வேண்டுமென தொல்காப்பியர் ஓவியம்போல எமக்குக் காட்டுகின்றார்."

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை முத்தமிழ் மன்றத்தினர் நடாத்திய முத்தமிழ்விழா மூன்றும் நாள் மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப்பேசிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டிதர் ஆ. சபாபதி பேசியபோது கூறியதாவது:

'தமிழ்மொழி, தமிழுக்காக உயிர்வாழ்ந்த பலரை ஞாபகப்படுத்துகின்றது. அரசன் தொடக்கம் ஆண்டி வரையும் பலர் தமிழ்த்தொண்டாற்றினர். உலகத்தில் பல மொழிகள் இருந்த இடம் தெரியாதுபோக தமிழ் மொழி அன்று தொட்டு இன்றுவரை இளமையுடன் நிலைத்துநிற்கின்றது, தமிழுக்குப் பல இடர்கள் வந்தபோதும் தமிழ் நூல்களில் சில அழியாமல் நிலைத்து நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றைய மொழிகளைவிட அழகான கருத்துக்கள் தமிழ் மொழியிலுண்டு என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். வள்ளுவர் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்து, வாழ்க்கைப்பயனையும் கூறியுள்ளார். திருக்குறளைப்போல் வேறுஒரு நூல் எந்தமொழியிலும் தோன்றவில்லையென அறிஞர்கள் கூறுகின்றார்கள்."

# 'தமிழர்மட்டுமே சங்கம் அமைத்து மொழியை வளர்த்தனர்"

— இராசதுரை

"தமிழில் உள்ள சொற்கள் தரும் சுவையான கருத்துக்களையும், அவற்றில் ஓர் எழுத்து மாறுபட்டால் ஏற்படும் பாகுபாட்டையும் நாம் காணலாம். தமிழறிஞர்களைத் தமிழுலகம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எந்த நாடு அறிஞர்களுக்கு இடம்கொடுக்கவில்லையோ அந்நாடு உயர்ச்சியடையமுடியாது. இந்நிலை தமிழர்களிடையே ஏற்படக்கூடாது" என்று மாலை நிகழ்ச்சியில் பங்குபற்றிப் பேசிய மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ இராசதுரை கூறினர். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"தற்காலத்தில் தமிழர்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படத் தொடங்கிவிட்டது. சென்ற ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற தமிழ்மாநாடு, உறங்கிக்கிடந்த தமிழர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டியுள்ளது. எந்த இனத்தவர்களும் சங்கம் வைத்து தம் மொழியை வளர்க்கவில்லை. ஆனால் நம் முந்தையர் சங்கம்வைத்து மொழிவளர்த்த பெருமைக்குரியவர்களாகும்.

நம்மிடையே தமிழின் சுவையை உணராத பலர் இருக்கின்றார்கள். அவர்கள் உங்கள் தங்கள் வீட்டில் கூட தமிழைப் பேச வெட்கப்படுகின்றார்கள். இந்நிலை நம்மிடையே இருந்து மாற வேண்டும். பல அயல்நாட்டார்கள் சொந்தமொழியையன்றி வந்த மொழியெதனையும் பேசுவதில்லை. ஆனால் தமிழர்களிடம் பிறமொழி மோகம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. தமிழுக்குப் பல விழாக்கள் எடுத்தாலும் தமிழர்களிடையே புத்துணர்ச்சியேற்படவில்லை. தமிழர்களிடையேயுள்ள கலை, விஞ்ஞான, சட்டப் பட்டதாரிகள் தங்கள் ஓய்வு நேரத்தில் ஒரு சிறு பகுதியையாவது தமிழுக்காகச் செலவுசெய்யவேண்டும்."

இதனைத் தொடர்ந்து கட்டுரை, பேச்சு, இசைப் போட்டிகளில் பரிசுபெற்றவர்களுக்கு மாவட்ட அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் பரிசு வழங்கினர். செல்வி க. க. சிவகாமசுந்தரி இசை விருந்தளிக்க, ஆசிரியகலாசாலை அதிபர் திரு. க. கந்தையா தொகுப்புரை நிகழ்த்தினர். கலாமணி ம. கயிலாயபிள்ளையின் மாணவிகள் அளித்த நடனமும், மட்டக்களப்புத் தமிழ்க்கலாமன்றம் மேடையேற்றிய நாடகமும் இடம் பெற்றன. திரு. ... சுந்தரம் நன்றி கூறினர்.

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழகத்திலகூட இவ்வித வகுப்புகளுக்கு 10 அல்லது 15 பேர்தான் வருவராம். ஆனால் யாழ்ப்பாணத்திலே 125 பேருக்கு மேல் ஒழுங்காக இவ்வகுப்புகளுக்கு வந்து ஊக்கமுடன் கேட்டதைக் காண தமக்குப் பெருமகிழ்ச்சியாக இருப்பதாயும். மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க யாழ்ப்பாணம் பெருந்தொண்டாற்றுமென்ற நம்பிக்கை தமக்கு அதிகமுள்ளதாயும் முதலியார் அவர்கள் சொல்லிப் பாராட்டினார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு குட்டிக்கதை. பிரிட்டனிலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும் இரு நாய்கள் வெளிநாடு வந்து சந்தித்தனவாம். பிரிட்டிஷ் நாய் இளைத்தும், ரஷ்ய நாய் கொழுத்தும் இருந்தது சுதந்தரமாக வேண்டியதைச் சாப்பிடலாமென்றே தான் புறப்பட்டு வந்ததாக பிரிட்டிஷ் நாய் கூறி, "ரஷ்யாவிலிருந்து நீ ஏன் வந்தாய்?" என்று மற்றொன்றைக் கேட்டது. "அங்கு இஷ்டம் போல் குரைக்க முடியவில்லை. சுதந்தரமாகக் குரைக்கலாம் என்றுதான் வெளிவந்தேன்" என்றதாம் ரஷ்ய நாய்!

ஃ ஃ ஃ

அச்சமில்லை நெஞ்சே
அரன் நாமங்கள்
நிச்சலும் நினையாய்
வினைபோயறக்
கச்சமாவிமுண்ட
கண்டா வென
வைச்ச மாநிதி
யாவர் மாற்பேறரே.

—அப்பர் சுவாமிகள்.

[நெஞ்சே! வினைகள்விட்டு நீங்குவதற்காக அரன் திருநாமங்களை நித்தமும் நினைவாயாக. உனக்கு அச்சமில்லை. திருமாற்பேற்று இறைவர், கைப்புள்ள ஆலகால விடத்தை உண்ட திருநீலகண்டர் என்று அன்பொடு கூற சேமித்துவைத்த பெருநிதிபோலப் பயன்படுவார்]

## ஒலிபெருக்கி உபயோகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசியல் அல்லாத நிகழ்ச்சிகளுக்கு ஒலிபெருக்கியை உபயோகிப்பதற்கான அனுமதியை இனிமேல் அவ்வப் பகுதி உதவிப்பொலிஸ்சுப்பிரினடனட் அலுவலகத்திலேயே நேரடியாகச் சென்று பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரைகாலமும் எந்த நிகழ்ச்சிகாயினும்ஒலிபெருக்கியை உபயோகிக்க அவ்வப் பகுதிக்கிராம சேவையாளரிடமும் பொலிஸ்அதிகாரியிடமும் அமைதிபெற்றபின்னரே அந்தபகுதிஉதவி பொலிஸ் சுப்பிரின்டனுல அதற்கான பூரண அமனுதி வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

அரசியல் கூட்டங்களுக்கு மட்டும் முன்னைய விதிகளின்படி அனுமதிவழங்கப்படுமென்றும், பொதுக் கூட்டங்களுக்கும், திருமண, கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் அப்பகுதி உதவிப்பொலிஸ் சுப்பிரின்டன்ட் அலுவலகத்திலேயே நேரடியாகச்சென்று அனுமதி பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி]

## பஸ்களில் புகைப்பதற்கு தடை

யாழ்ப்பாணம், சனி

பஸ்களில் புகைப்பிடிப்பதை முற்றாகத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலங்கை போக்குவரத்துசபை பஸ்களில்புகைப்பதை தடைசெய்வதற்கு சட்டமூலம் நடவடிக்கை எடுக்க இலங்கை போக்குவரத்துச்சபை தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

தற்பொழுது இரட்டைத்தட்டு பஸ்களில் கீழ்த் தட்டுககளில் புகைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வேலையில்லாத்....

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

சாலைகள் மூன்று தரமாகப் பிரிக்கப்படும். 1-ம் வகுப்பிலிருந்து 7-ம் வகுப்பு வரை கனிஷ்ட பிரிவுக்குள் அடங்கும். 8-ம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்பு வரை மத்திய பிரிவுக்குள் அடங்கும். ஜீ. சி. ஈ. சாதாரண, உயர்தர வகுப்புகள் அதிமேற்பிரிவுக்குள் அடங்கும். இவ்வளவு திட்டங்களையும் செவ்வனே நிறைவேற்ற இலங்கையின் வருமானத்திலிருந்தே பணம் பெற வேண்டும். இதற்குப் போதிய ஆள் பலம் வேண்டும். இன்றைய குழந்தைகளே நாட்டின் வருங்காலப் பிரஜைகள். அவர்களைத் திறமைசாலிகள் ஆக்குவது பாடசாலை ஆசிரியர்களின் தலையான கடமையாயினும் பெற்றோர்களும் இதற்குப் போதிய ஊக்கமளிக்கவேண்டும்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய வடமாநில ... யாதிபதி திருமதி ந... ரத்தினம் பேசுகையில், மனிதனுடைய உண்மை லட்சியம் ஒழுக்கத்தில் தான் தங்கியுள்ளதென்றும் சிறந்த மனநிலையே ஒழுக்கமென்றும், சிறந்த ஒழுக்கத்தைப்பயின்றுகொள்ளபாடசாலை தான் தகுந்த இடமென்றும் கூறினர். திருமதிபெரேராபரிசில்கள்வழங்கினர். திரு. இராமநாதன் ஜே. பி. நன்றி தெரிவித்துப் பேசினர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. [ந. நி.]

# ஆலயப்பிரவேச வழக்கில் எதிரிகளுக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

'வேதத்திலோ, ஆகமத்திலோ கோவில் வழிபாட்டை சாதி அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டவில்லை சாதி ஒழிப்புச்சட்டம் பல சாகியத்தாருக்கும் கோவில் வழிபாட்டை அவரவர் விரும்பிய முறைப்படி நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க நிர்ணயசட்டப் பிரகாரம் 29[2] குறிப்பிட்டபடி சகலருக்கும் சுவாமி வழிபாடுபற்றிய உரிமையைப் பூரணமாகக் கொடுப்பதற்கு இச்சட்டம் வழிவகுக்கிறது' என ஆலயப் பிரவேச வழக்கில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு இன்று காலை தீர்ப்பளிக்கையில் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கின் தீர்ப்பை அறிவதற்காக கோர்ட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் சமுகமளித்திருந்தனர்.

தொண்டமானாறு செட்டியூரைச் சேர்ந்த முருகன் இலக்குணன் என்பவர் கடந்த மாசி மாதம் 17-ம் திகதி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலுக்குள் உட்பிரவேசிக்க விடாது பலாத்காரமாக தடுத்ததாக அதே ஊரைச் சேர்ந்த க. தங்கவேலு ஐயர், த. சிவசுப்பிரமணிய ஐயர் ஆகிய இருவர்மீதும் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நான்கு நாட்கள் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணை முடிவில் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கோ. விக்னராஜா இன்று தீர்ப்பளிக்கையில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு தலா 100 ரூபா அபராதம் செலுத்தும்படியும் கட்டத் தவறினுல் ஒரு மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் தீர்ப்பளித்தார்.

வழக்காளி சார்பில் புரக்டர் வி. பி. சுந்தரலிங்கம் அனுசரணையுடன் அட்வக்கேட் எஸ். கதிரவேற்பிள்ளை ஆஜரானர். எதிரிகள் சார்பில் புரக்டர் எஸ். பொன்னுத்துரை அனுசரணையுடன் புரக்டர் எஸ். சி. கதிரவேலு ஆஜரானர்.

எதிரிகள் இருவரும் அப்பீல் செய்வார்களெனத் தெரியவருகிறது.

கிராம சேவகரின்

# கடமையை தடுத்தவருக்கு சிறையும் அபராதமும்

காங்கேசன்துறை, சனி

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 26-ம் திகதி காணித் தகராறு காரணமாக விசாரணை நடத்துவதற்குச் சென்ற உரும்பராய் கிராம சேவகர் திரு. கந்தையா அமிர்தலிங்கத்தை அவரது உத்தியோக பூர்வமான கடமையைச்செய்யத் தடைசெய்து அதேநேரத்தில் அவருக்கு அடித்துக் காயம் விளைவித்து ஆகிய நான்கு குற்றங்களைச் சாட்டி அத்தயிடத்தைச்சேர்ந்த தம்பிமுத்து சிவஞானம், சிவஞானம் விஜயசேகரம், குழந்தைவேலு அருளானந்தம் ஆகிய மூவருக்கும் எதிராகச் சுன்னுகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முதலாம் எதிரிக்கு ஒருமாத கடுங்காவல் சிறைத்தண்டனையும் நூறு ரூபா அபராதமும் அவரது மகனை இரண்டாம் எதிரிக்கு 50 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. மூன்றுவது எதிரியான குழந்தைவேலு அருளானந்தம் விசாரணைக்கு ஒருமுறை கோர்ட்டிற்கு வராததால் அவரது குற்றச்சாட்டுகளை நீதிபதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தினர்.

## கடன் நிவர்த்தி சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன்நிவர்த்திச் சங்கத்தின் 11-வது ஆண்டுவிழா திரு. எஸ். ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் கடன் எல்லையை ஒரு லட்சம் ரூபாவாக அனுமதிக்குமாறு கூட்டுறவு மாகாண வங்கியையும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரையும் கோருவதென்றும் சென்ற வருட இலாபத்தில் அங்கத்தவர்களின் பங்குகளுக்கு 3 வீத வட்டி வழங்கவேண்டும் என்றும் இன்னும் பல தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேறின.

புதிய நிர்வாகசபைத் தெரிவில் தலைவராக மீண்டும் திரு. எஸ். ஆர். அருமைநாயகமும், உபதலைவராக திரு. எம். பி. சிவசுப்பிரமணியமும், தனதிகாரியாக திரு. எஸ். பாலசுப்பிரமணியமும், உப தனதிகாரியாக திரு. ஜி. செல்லத்துரையும் தெரியப்பட்டனர். 8 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## மடத்தில் திருட்டு மேற்பார்வையாளர் கைது

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை, ஓராங்கட்டையைச் சேர்ந்தஇளையதம்பி பெண் சரோஜினிதேவி என்பவர் தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் மடமொன்றில் இரவு நித்திரை செய்துகொண்டிருந்த சமயத்தில் அவருடைய சுமார் 600 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைக் களவாடியதாக அம்மடத்தின் மேற்பார்வையாளர் ஒருவரை வல்வெட்டித்துறைப்பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

தீவுப்பகுதி

## குடிநீர் பிரச்னை தீர்ப்பதற்கு வழி

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் குடிநீர்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு ஆலோசனைசெய்யும்முகமாக இங்கு வந்த உலகவங்கி நிபுணர் திரு. மாட்டின்கயஸ் என்பவர் வேலணையில் உள்ள சிலுந்தாக் குளத்தைப் பார்வையிட்டார்.

இக்குளத்திலிருந்து நாரந்தனைக் கிராமசபைப் பகுதிக்கும், ஊர்காவற்றுறை பட்டினப் பகுதிக்கும் சகல காலமும் தண்ணீர் கொடுக்க முடியும் என அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு ஊர்காவற்றுறைப் பட்டினசபையார் முயற்சி எடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆசிரியர் சங்க பேச்சுப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, சனி

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க வடமராட்சிக் கிளையின் பேச்சுப் போட்டி பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் பி. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் போட்டியில் வெற்றிபெற்றனர்.

மேற்பிரிவு பெண்- சி குணவதி வல்வெட்டித்துறை சைவவித்தியாசாலை, சி யோகேஸ்வரி, யார்க்கரு விநாயக வித்தியாசாலை, க நிதலிற்கரசி புற்றளை வித்தியாசாலை, க. பரமேஸ்வரி புலோலி மெதடிஸ் மிசன் பாடசாலை.

மத்தியபிரிவு ஆண்- ந. நாகேந்திரம் பு. வி, சி. துரைலிங்கம் பு. வி., க. தவச்செல்வம் பு. மெ. மி.

கீழ்ப்பிரிவு பெண்- இ. இராசேஸ்வரி பு. வி., ந. உமா, மாணிக்கவாசகர் வித்தியாசாலை, சு. மகேந்திரராணி நெல்லியடி மெ. மி. பா.

மேற்பிரிவு ஆண்- எ. கிறிஸ்ரி ஜெயராஸ் கல்லடி ஆர். ஸி. பாடசாலை, செ தேவராசா பு. வி, சி. தியாகராசா யா. வி. வி.

மத்தியபிரிவுபெண்- பொ. யோகேஸ்வரி யா வி. வி.,ச பத்மாவதி பு வி, சி. இசயராணி, பு மெ. மி.

கீழ்ப்பிரிவு ஆண்- இ. நாகேந்திரன் பு. வி., க. சிவகுமாரன் பு. வி., அ சத்திவேல் வல்வெட்டித்துறை ஆர். ஸி. பாடசாலை.

செல்வி இராசசிங்கம், செல்வி பத்மநாதன், திருமதி பொ. தணிகாசலம். எம். பொன்னையா, சி. குருநாதன், ஆர். பாக்கியநாதன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். ஆ. க மாணிக்கம் நன்றி கூறினார்

# செங்கழநீர்த் தொட்டி உற்சவம்

கொக்குவில், சனி

கொக்குவில் நந்தாவில் சற்புலத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் கொக்குவில் கோண்டாவில் இந்து இளைஞர்சங்க ஆதரவில் செங்கழ நீர்த்தொட்டி உற்சவம் இன்று நடைபெறும்,

# தொழிற்சாலைகளை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொழில்வளர்ச்சி அடைந்துள்ளதைக் காட்டுகிறது.

நம் நாடு, மற்றநாடுகளைவிட, அரசியலிலோ அலலது பொருளாதாரத்திலோ குறைந்து இருக்கலாம். ஆனல் அறிவிலும் ஆற்றலிலும் நாம் எந்தவகையிலும் பின்தங்கிவிடவில்லை.

''நம் நாடு வறுமை மிகுந்த நாடு. கச்சாப்பொருட்கள் பற்றுக்குறை இருக்கிறது. அதனல் தான் தொழிலில் சிறநத முன்னேற்றம் அடையமுடியவில்லை'' என்று திட்டக்கமிட்டித்தலைவர் அசோக் மேத்தா கூறுமூர்.

சேலத்தில் கிடைக்கும் இரும்பையும், பாக்சைடையும் கொண்டு நாம் நல்ல தொழிற்சாலை அமைக்கமுடியும்.''

# ''இறைவன் அருளேமனதில் அமைதிதரும்''

— திரு. வஜ்ரவேலு முதலியார்

உடுவில், சனி

''விஞ்ஞானம் தரும்பலன்களை நமக்கு எப்படிச் சாதகமாக்கிக்கொள்ளலாம் என ஆராய்தல்தொழில்நுட்பம். விஞ்ஞானத் துறையில் தொழில்நுட்பப் பயிற்சி பெறுபவர்கள் அரசியல், பொருளாதாரத்துறைகளில் மட்டும் நல்ல நிலையை அடைந்தால் போதாது. உள்ளக் கட்டுப்பாட்டையும், அறநெறியையும் கைக்கொள்ளுதல அவசியம். விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவைகளோடு அறநெறியையும் ஆராய்ந்த திருவள்ளுவருடைய நூலைப் படித்து, ஆழ்ந்த நோக்கும், தீவிரசிந்தனையும், மனக்கட்டுப்பாடும் கைக்கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கையில் சகல துறைகளிலும் முன்னேறமுடியும்'' என்று யாழ்ப்பாண கனிஷ்ட தொழில்நுட்பப்பாடசாலை மாணவர் மத்தியில் உரைநிகழ்த்திய சித்தாந்த கலைச்செல்வர் திரு. க. வஜ்ரவேலு முதலியார் கூறினர்.

பாடசாலை சைவமன்றத்தின் ஆதரவில் பாடசாலை அதிபர் திரு, க, நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. க. வஜ்ரவேலு முதலியார் தொடர்ந்து பேசுகையில் ''அமெரிக்காபோன்ற முன்னேற்றமடைந்த நாடுகள் கூட சமயவாழ்வு அவசியம் என்பதை ஒப்புக்கொள்கின்றன. நம்மைக்கட்டுப்படுத்திக்கொள்ளாமைதான் நாட்டில் தற்கொலைக்குக் காரணமாகும். மனேதத்துவ நிபுணரிடம் மனஅமைதி பெறச்செல்வதைவிட இறைவன அருளைவேண்டி வழிபட்டால் மனஅமைதி கிட்டும்'' என்றூர். சைவமன்றச் செயலாளர் நந்தலால்நேரு, திரு. வஜ்ரவேலு முதலியாருக்கு மன்றத்தின்சார்பில் நன்றி தெரிவித்தார்.

# ஞானுேபதேச வகுப்பு

பண்டத்தரிப்பு, சனி

யாழ்ப்பாணம் ஞானுேபதேச நடுநிலையத்தினர் வாரந்தோறும இளவாலை, அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில விவிலிய ஞானுேபதேச வகுப்புகளை நடாத்தி வருகின்றனர்.

# அரசாங்க ஊழியருக்கு மத்திய இடமாற்ற சபை

## வட்டுக்கோட்டை எம். பி. கோருகிறுர்

சங்கானை, வியாழன்

'அரசாங்க ஊழியர் இடமாற்றம் பற்றி தீர்மானிக்க ஒரு மத்திய இடமாற்றச் சபையை ஏற்படுத்தவேண்டும்' என கோரும் ஒரு பிரேரணையை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் அரசாங்கப்பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்திருப்பதாக அறியப்படுகிறது

திறைசேரியின் கட்டுப்பாட்டின்கீழ ஒருமத்திய இடமாற்றச்சபை ஏற்படுத்தப்பட்டால் எல்லா இலாகாக்களிலும் வேலைசெய்யும் சந்தர்ப்பம் அரசாங்க ஊழியர் அனைவருக்கும் பரவலாகக் கிடைக்குமென்றும் இப்பொழுது உள்ளதுபோல் சில ஊழியர்கள் [illegible] தங்கள் சேவைக்காலம் முழுவதையும் ஓர் இலாகாவிலேயே கழிக்கும் நிலைமை மாறுமென்றும் கருதப்படுகிறது.

# 'நாட்டின் துரோகிகள்'

உடுவில், சனி

''நாட்டின் நலன் கருதித் தொடங்கும் சிரமதான வேலைக்கு ஒத்துழைப்புத் தராது எவரும் இருப்பின் அவர்கள் நாட்டின் துரோகிகளாவர்'' என்று சங்குவேலி சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற உணவு அபிவிருத்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் கூறினர்.

திரு. கே. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வாலோசனைக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி ஆணையாளர் திரு. சாம். வடிவேல், உடுவில்கிராமசேவையாளர் திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி, சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கக் காரியதரிசி திரு. த. செல்லத்தம்பி, மானிப்பாய் கிராம சபைத்தலைவர் ஆகியோருட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தரோடையிலுள்ள சன்மார்க்க தவகூடத்தில் மெய்கண்டாரின் கருத்தரங்கம் ஒன்று நடைபெறவிருக்கிறது. கருத்தரங்கில் 8 விஷயங்கள் பற்றி [illegible] முவிருக்கின்ற [illegible]





உறுதியும், நீடிய பாவனையும், கறளை எதிர்க்கும் வலுவும், அரிப்புக்கு உட்படாத் தன்மையும், தீப்பிடிக்காத இயல்புமுடைய கனக்குறைவான எஸ்-லோன் மழைநீர்வடிகால் மற்றும் பீலிப் பைப்புகள் கடினமான பி. வி. சி. கொண்டு தயாரிக்கப்பட்டவை. அவை கையாள இலகுவானவை; பதிப்பதற்குச் சுலபமானவை பராமரிப்பின்றியே ஆயுட்காலம் முழுதும் செயலாற்றுமென்ற உத்தரவாதமுள்ளவை.

S-lon

எஸ் - லோன்

கீழ்த்தரைக் குழாய்கள் பீலிக் குழாய்கள்

தண்ணீர் விநியோகம் பாசன வசதிகள் ஆகியவற்றை அமைப்பது சம்பந்தமாக நாம் வழங்கும் இலவச ஆலோசனைச் சேவையைப் பயன்படுத்த மறவாதீர்கள்.

மகாராஜா ஓர்கனைசேஷன் [illegible] வீதி, கொழும்பு 11. டெலிபோன்: 3603, 3634.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்டின் வாரிசுகள.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொக்கி போட்டியில் 'கனகரத்தினம' வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம், கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான ஹாக்கிப் போட்டியில் கடுமையான போட்டியின் பின்னர் கனகரத்தினம் கோஷ்டி வெற்றியீட்டியது.

கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத் தின் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை ரசிப்பாகக் காணப்பட்டது. வெற்றி தோல்வி காணமுடியாத அளவுக்கு இருசாராரும் விட்டுக்கொடுக்காமல் பலமாக மோதினர். வட்டுக்கோட்டை வீரர்கள் கோல்கள் போடுவதற்கு தீவிரமாக முனைந்து கொண்டிருந்தபோதும் அவர்களது முயற்சிகள் கனகரத்தினத்தின் சிறந்த பின்னணி வீரனை சுதேசநாதனினுல் முறியடிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தது.

இப்போட்டி முடிவில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 1—0 கோலால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. வி. ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். ——

கரவெட்டி

## விக்னேஸ்வரா இல்லப்போட்டி

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையேயான வருடாந்தவிளையாட்டுவிழா கல்லூரி அதிபர் திரு.வி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இவ்வருடக் கல்லூரிச் சாமபியன்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:— ஆண்கள் அதிமேற்பிரிவு: கே. தட்சணுமூர்த்தி, மேற்பிரிவு; கே. சிவக்கொழுந்து, மத்தியபிரிவு: கே. விநாயகப்பெருமாள், என். தங்கதுரை, கனிஷ்டபிரிவு; கே. திரவியம்,,

பெண்கள் மத்தியபிரிவு: ஆர். சுந்தரேஸ்வரி, கனிஷ்டபிரிவு: ரீ. கலாஜோதி,. சிறந்தநடையாளர்; கே. சிவக்கொழுந்து, சிறந்த வயல் நிகழ்ச்சியாளர்: கே, விநாயகப்பெருமாள், மேற்பிரிவு அதிஉயர்ந்த ஓட்டக்காரர்: எஸ். பரமநாதன்

மஞ்சள் இல்லம் முதலாவதாகவும், சிவப்பு இல்லம் இரண்டாவதாககவும், நீல இல்லம் மூன்ருவதாகவுய், பச்சை இல்லம் நாலாவதாகவும் வந்தன.

## தாச்சிப் போட்டி முடிவுகள்

பூநகரி, சனி

பூநகரி மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையே தாச்சிப்போட்டி திரு.மு.சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.முடிவுகள் வருமாறு:-

மேற்பிரிவு ஆண்கள்: கந்தப்பு இல்லம்,எட்வேட் இல்லம்,செல்லத்துரை இல்லம்.

மத்தியபிரிவு ஆண்கள்: எட்வேட் இல்லம், செல்லத்துரை இல்லம்,கந்தப்பு இல்லம்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கன்னியர் மடம் தமிழ் பெண்கள்பாடசாலை மாணவர்கள் பெற்ருேர் ஆசிரியர் சங்க உறுப்பினர் ஆகியோர் சிரமதானம் மூலம் பாடசாலைக் கட்டிடத்துக்கு வெள்ளையடித்தனர் பாடசாலைத் தளபாடங்களையும் அவர்கள் பழுது பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கல்வித் திட்டம்

# வேலையில்லாதிண்டாட்டத்தை நீக்க வழிஅமைக்கும்’

## மகாவித்தியாதிபதி

யாழ்ப்பாணம். ஞாயிறு

''படித்த வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும்இன்றைய வேளையில் புதிய கல்வித் திட்டம் இதற்கு ஒரு வழியமைக்கும் என்பதில் ஐயமில்லை. பல வாலிபர்களுககும் பல துறையிலும் கல்வி போதிப்பதும்போதிய பயிற்சி அளிப்பதும் புதிய கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும. பல ஆண்டு கால சுற்றுப்பிரயாணத்தின் தமது அனுபவத்தின் பின்னர் கல்வி அமைச்சர் தயாரித்திருக்கும் கல்வித் திட்டத்தை இன்று எதிர்ப்பது அவசியமற்றதாகும்.''

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற கோண்டாவில் இராம கிருஷ்ண மிஷன் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அமைச்சின் நிரந்தரக்காரிய தரிசியும் மகாவித்தியாதிபதியுமான திரு. எம்.ஜே. பெரேரா பேசுகையில் தெரிவித்தார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் திரு. பெரேராவும், திருமதி பெரேராவும், வடமாநிலக் கல்வியதிபதி திருமதி நவரத்தினமும் கோண்டாவில் சந்தியிலிருந்துவிழா மண்டபத்துக்கு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ‘கனகசபாபதி அரங்கில்’ திருமதி நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. பெரேரா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

புதிய கல்வித் திட்டம் பாராளுமன்றத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வரும் இன்றைய வேளையில் மாணவர்களின் எதிர் காலக் கல்வி பற்றி எதையும்திட்டவட்டமாக எம்மால் கூற முடியாது. இலங்கையின் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கை அரசாங்கம் கல்வி விருத்திக்காகச் செலவிடுகின்றது. அடுத்த நிதி வருடத்தில் இன்னமும் கூடுதலாக ஒதுக்கவுள்ளது. புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்ததும் பாட

[5-ம் பக்கம் பார்க்க]

## தீவிபத்தில் சிக்கிய பெண் மரணம

யாழ்ப்பாணம், ஞாயிறு

சித்தங்கேணியில் அண்மையில் நடைபெற்ற தீவிபத்தில் சிக்கிப் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மகேஸ்வரி [21 வயது] என்ற இளம் பெண் நேற்று நண்பகல் மரணமானுர். இம்மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரண விசாரணை நடத்திஞர்.

இத் தீ விபத்தில் சிக்கிய மற்றொருவரான மரணமான மகேஸ்வரியின் குழந்தை யோகேஸ்வரனும் [9 மாதம்] நேற்றுமுன்தினம் மரணமானது தெரிந்ததே. மகேஸ்வரியின் கணவனை கிருஷ்ணபிள்ளையும் [30 வயது] நெருப்புக்காயங்களுககுள்ளாகியதால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றுர். [ந. நி.]

## நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய ‘இறுதிப் பரிசு’ என்னும் நாடக நூலின் வெளியீட்டு விழா திரு. இ. அம்பிகைபாகன் தலைமையில் காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் இன்று மாலை 6 மணியளவில் நடைபெறும்.

## கர்ப்பிணிகள் கஷ்டம

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மேல் மாடியில் இருக்கும் பிரசவ வார்ட்டுக்கு கர்ப்பிணிகளைக் கொண்டு செல்லும் மின்சார ‘லிப்ட்’ கடந்த 2 மாத காலத்துக்கு மேலாக பழுதடைந்த நிலையிலிருப்பதால் அவசர சிகிச்சைக்காக மேல் மாடிக்குக் கர்ப்பிணிகள் கொண்டு செல்வதில் மிகவும் கஷ்டமேற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

## விளையாட்டு மைதானம் இல்லை

சுன்ஞகம், சனி

சுன்ஞகம் மயிலணி சைவ வித்தியாசாலையில் மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கென விளையாட்டுநிலம் இல்லை. இதனல் இங்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதில்லை.

# ‘சுருட்டுத்தொழில்வளர்ச்சிக்கு உற்பத்தி வரியை நீக்குக’

— ஜி. ஜி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''உற்பத்தி வரி சுருட்டுத் தொழிலுக்கு அத்தியாவசியமில்லை. சுருட்டுத் தொழில் ஒரு குடிசைக் கைத்தொழில் இயந்திரங்களின் உதவியின்றி தொழிலாளர் தங்கள் கைகளின் உதவி கொண்டு செய்யும் இத் தொழில் வளர்ச்சியடைய உற்பத்திவரி நீக்கப்பட வேண்டும்''.

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டம் தாவடியில் நடந்த போது யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறிஞர்.

திரு. சி. முதலியார் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

1963-ம் நிதிச்சட்டத்தின் கீழ் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், யந்திரம் மூலமாகச் செய்யப்பட்டாலும் அதற்கு உற்பத்தி வரி 64-ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி முதல் இல்லையென அரசாங்கம் அறிவித்துள்ளது. இதன்கீழ் சுருட்டுத் தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள உற்பத்தி வரியை சுலபமாகத் தீர்க்கவழியுண்டு. அப்படிச் செய்தால் வடபகுதியில் 10 ஆயிரம் சுருட்டுத் தொழிலாளர் தொடர்ந்து வேலை செய்ய முடியும்.

சங்கச் செயலாளர் திரு. எ. தியாகராசா பேசும் போது இம்முறை சமர்ப்பிக்கப்படவிருக்கும் ‘பட்ஜட்’டில் உற்பத்தி வரியை நீக்காமலிருந்தால்சுமார்பத்தாயிரம் சுருட்டுத் தொழிலாளர் குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலை ஏற்படுமென்றும், வடபகுதியில் சுருட்டுத்தொழில் சாலைகள் மூடப்படுமென்றும் கூறிஞர்.

## காணமற்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருவதாகவும் தெரிகின்றது. காணமல்போன கார் வாலியோ ஒருநகை வியாபாரியெனநேற்றையசெய்தியில் வெளியானது தவருகும். [ந. நி.]

## முடி வெட்ட ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டில் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

பெ. பமாலை பங்கிராஸ் புலேந்திரன் ஆகியோர்சாட்சியமளித்தனர்.

நீதிபதி இன்று தீர்ப்புக் கூறுமுன் 1957ம் ஆண்டு சமூகக் குறைபாடு ஒழிப்புச் சட்டத்தை விளக்கி அதில் பொதுச்சலூன்களில் எவர் முடியையும் வெட்ட மறுக்கக் கூடாது என்பதை எடுத்துக் கூறிஞர்.

எதிரியை 100ரூபா அபராதம் கட்டுமாறும் கட்டத் தவறிஞல் ஆறுமாதக் கடூழியச்சிறை அனுபவிக்குமாறும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

வழக்காளிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா வாதாடிஞர்.

### ஊர்வலமும் கூட்டமும்

இவ் வழக்கு தீர்ப்பு கூறிய பின்னர் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து தெல்லிப்பழை தபாற் கந்தோர் மட்டும் முற்போக்கு வாலிபர் கழகம் ஊர்வலம் நடத்திஞர்கள். முற்போக்கு வாலிபர் கழகக் காரியதரிசி திரு. புலேந்திரன், திருவள்ளுவர் மகாசபை காரியதரிசியும் சிகை அலங்கரிக்க மறுக்கப் பட்டவருமான திரு. எஸ். பங்கிராசுக்கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாகச்சென்றனர்.

ஊர்வலத்தின் பின்னர் வாலிபர் கழகம் ஓர் கூட்டத்தையும் நடாத்திஞர்கள். கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை, மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.

## கார்த்திகைக்காய் முக்கொலை வழக்கு

காங்கேசன்துறை, சனி

கார்த்திகைக்காய் முக்கொலை வழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரவேச வைத்திய அதிகாரி திருமதி நந்தினி ஆனந்தராஜா, அரசாங்க உதவிகூறுபாடு வைத்திய அதிகாரி திரு தம்பிப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மேல் விசாரணை ஜூலை மாதம் 5-ம் திகதிக்கு பின் போடப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராஞர்.

## அபின் வைத்திருந்தவருக்கு ரூ. 1000 அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

இம்மாதம் 17ந்திகதி வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கம்பர்மலை என்றஇடத்தில் சின்னையாஎன்பவர் வீட்டில் 8இரு. அபின் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டு கைப்பறறப்படடுச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ரிமான்டில் வைக்கப்பட்ட இராஜேந்திரம், தர்மதாசா சொலமன், பெரேரா ஆகிய நால்வரும் இன்று பருத்தித் துறைமாஜிஸ்திரேட்திரு. கேவிக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட போது மாஜிஸ்திரேட் இராஜேந்திரம், தர்மதாசா, சொலமன்ஆகியமூவரையும் விடுதலைசெய்து பெரேராவைக் குற்றவாளியாகக் கண்டு 1000ரூபா அபராதம் செலுத்தும்படியும் கட்டத் தவறிஞல் 3மாதச்சிறைத் தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார்.

## 1,200 டாக்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வையிட்டதாகவும் டாக்டர் திருமதி மலலகமவிஞல் தவருன சிகிச்சைக்குள்ளானவர் என்று கருதப்படும் அந்தோனிப்பிள்ளை என்ற நோயாளியைப் பார்த்ததாகவும் கூறிஞர். அந்த ஆஸ்பத்திரியில் 16 டாக்டர்கள் இருப்பதாகவும் ஆஞல் ஒரே ஒரு ‘தேமோ மீட்டர்’ மாத்திரமே இருப்பதாகவும் இதஞல் டாக்டர்கள் மீது வீண் குற்றம் சுமத்துவது தவறு என்றும் அவர் கூறியுள்ளார்.

டாக்டர் திருமதி மலலகம கவலையீனமாகக் கடமைபுரிந்தாரென்ற குற்றச்சாட்டின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது காரணமாகவே டாக்டர்கள் தாமத வேலை இயக்கத்தைக் கைக்கொள்கிருர்கள்.

இதை நாங்கள் விரும்பவில்லை ஆஞல் தவிர்க்கமுடியாத காரணத்திஞல் இந்த நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறதென்று டாக்டர் ஜயவர்த்தன கூறியுள்ளார்.


3-வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரோஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ண [திருமலை] மொடேர்ன் [பதுளை]
ராஜ் [நீர்கொழும்பு] விஜிதா [ஹட்டன்]

ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்
செல்வம்



மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி — சாவித்திரி நடித்த
காத்திருந்த கண்கள்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ நடித்த
தங்கத் தம்பி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன் ஜெயலலிதா நடித்த
குமரிப் பெண்

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Sandra Dee
Bobby Darin
in
THAT
FUNNY FEELING


இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org